**செய்தி வெளியீடு எண் : 476** **நாள்: 26.03.2022**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டில் 14 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார்கள். அதில், பாரதியார் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு சென்னை பாரதி நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித் துறையினரால் நடத்தப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் 04.12.2021 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் பெரும்புலவன் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமைகளை புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக இன்று 26.03.2022 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில், வானவில் பண்பாட்டு மையத்தின் சார்பாக பேராசிரியர் திருமதி.உலகநாயகி அவர்கள் பாரதியார் அவர்கள் சிறப்புகளை எடுத்துரைத்தார்.

மேலும் மகாகவி பாரதியாரின் பாடல்களுக்கு திருமதி.கிரிஜா முருகன் அவர்களின் பரதநாட்டியம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு.வி.என்.அண்ணாதுரை அவர்கள் வரவேற்று பேசினார், பொதுமக்கள் கலந்து கொண்டு பார்வையிட்டார்கள். நிறைவாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.எஸ்.ரமேஷ் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in